


விருதுநகர் வடக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு கூட்டம் மல்லாங்கிணறில் தலைவர் தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு பேசினார். உடன் தேர்தல் பொறுப்பாளர்கள், மதுரை பாலா, பவானி ராஜேந்திரன், செண்பக விநாயகம், விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனவாசன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், வர்த்தக அணி வனராஜ், சிவகாசி மாநகராட்சி செயலாளர் உதயசூரியன், திருச்சுழி ஒன்றிய செயலாளர் பொன்னுத்தம்பி, நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன், காரியாபட்டி செந்தில், சிவகாசி காளிராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இராதாபுரத்தில் நடைபெற்று வரும்

# அரசு திட்டப்பணிகளின் வளர்ச்சி குறித்து ஆய்வு!

## பேரவைத் தலைவர் மு. அப்பாவு மேற்கொண்டார்!

நெல்லை, மே 23-

நெல்லை மாவட்டம், “உங்களைத் தேடி உங்கள் ஊரில்” இராதாபுரம் வட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகளை சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் ஆகியோர் நேற்று முன்தினம் (21.05.2025) ஆய்வு மேற்கொண்டனர்.

”உங்களைத் தேடி, உங்கள் ஊரில்” திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வட்டத்திலும் முதற்கட்ட சுற்று நிறைவு பெற்று,இரண்டாம் சுற்றாக மானூர்,அம்பாசமுத்திரம்,பாளையங்கோட்டை,திசையன்விளை, நாங்குநேரி ஆகிய வட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு இன்றையதினம் ஆறாம் வட்டமாக இராதாபுரம் வட்டத்திற்குட்ட பல்வேறு பகுதிகளுக்கும் சென்று,ஒவ்வொரு திட்டங்கள் குறித்தும்,நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

இராதாபுரம் வட்டம், வள்ளியூர், நாங்குநேரி,இராதாபுரம், காவல்கிணறு ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் மருத்துவ வசதி மேற்கொள்வதற்காக 200 படுக்கை வசதிகளுடன் கொண்ட நவீன தொழில் நுட்ப வசதிகளுடன், அனைத்து வசதிகளுடன் ரூ.30 கோடி மதிப்பீட்டில் வள்ளியூரில் மாவட்ட தலைமை மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதை,சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டதோடு,மருத்துமனையின் கட்டுமானப் பணிகளை அரசு விதிமுறைகளின்படி குறிப்பிட்ட காலத்திற்குள் நிர்ண யிக்கப்பட்ட தரத்தில் பணிகளை மேற்கொள்ள வேண்டும். பொதுப்பணித்துறை அலுவலர்கள் தனிக்கவனம் செலுத்தி,ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டுவருவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து,வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்குவதற்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் மூலம் இராதாபுரம் வட்டம் வள்ளியூர் பகுதியில் ரூ.63.45 கோடி மதிப்பீட்டில் 504 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது.கட்டிடங்களின் தரம் மற்றும் உறுதித்தன்மை குறித்து ஆய்வு செய்ததோடு,பணிகளை விரைந்து முடித்திடவும், பயனாளிகளுக்கு பங்களிப்பு தொகை வங்கிகள் மூலம் பெற்று வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

மேலும் ரூ.12.13 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் வள்ளியூர் புதிய பேருந்து நிலையம் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டதோடு, ரூ.6.80 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் வள்ளியூர் கலைஞர் நூற்றாண்டு நினைவு தினசரி சந்தையினையும் பார்வையிட்டு ஒரு மாதக்காலத்திற்குள் சந்தை பணிகளை விரைந்து முடித்திடுமாறும்,பேரூராட்சி அலுவலர்களுக்கு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு

அறிவுறுத்தினார். ரூ.59.38 கோடி மதிப்பில் பணக்குடியில் கட்டப்பட்டு வரும் 462 குடியிருப்பு பணிகளையும், ரூ.423.13 கோடி மதிப்பீட்டில் களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளில் அனைத்து வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் 24 புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, 720 கி.மீ நீளம் பைப்லைன் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.பணகுடி பகுதி 1 தர்மபுரம் பகுதியில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து, காவல்கிணறு பகுதியிலுள்ள மலர் வணிக வளாகம் பணிகள்ய புனரமைப்பு குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், இராதாபுரம் வட்டம் கூட்டப்புளியில் தூண்டில் வளைவு அமைப்பதின் மூலம் கடல் அரிப்பு முற்றிலுமாக தடுக்கப்படுவதால், மீனவர்களின் நலன் கருதி ரூ.48.50 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு மற்றும் மீன் இறங்குதளம் அமைக்கும் கட்டுமான பணிகளையும் பார்வையிட்டு,ஆய்வு செய்தார்.

மேலும்,”உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தில் இராதாபுரம் வட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டது தொடர்பாக இராதாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார்,ஆய்வு மேற்கொண்டார். ”உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தில் இராதாபுரம் வட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

ஆய்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மா. சுகன்யா,ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன்,திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) இலக்குவன்,இணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு. லதா,செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) மாடசாமி உதவி நிர்வாக பொறியாளர் ஏழில், ரீத்தா,உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) வில்லியம் ஜேசுதாஸ்,பேரூராட்சிகள் உதவி செயற்பொறியாளர் மாரிமுத்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கண்காணிப்பு பொறியாளர் கென்னடி,செயற்பொறியாளர் தீனதயாள் மோசஸ்,வட்டாட்சியர் செல்வகுமார் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்றும் சிறப்பான நிர்வாக திறமையை கருத்தில் கொண்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் முன்னிலையில் வடகரை பேரூர் எஸ்.டி.பி. மற்றும் பல்வேறு கட்சிகளில் இருந்து இளைஞர்கள் முகமது அப்பாஸ் மீரான்,சம் சுகுதா,முகமது ஜின்னா,செய்யது அகமது,முகமது பாரூக்,அக்பர் அலி.அசார்,சதாம் உசேன்,அபூபக்கர் சித்திக்,ஏ.சதாம் உசேன்,அசாருதீன்,கலையரசன் உள்பட 15 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு கழக இரு வண்ண கலர் வேட்டி வழங்கப்பட்டது.



பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பாண்டியூர் கிராமத்திற்கு புதிய பேருந்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பரமக்குடி பேருந்து நிலையத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் கிளை மேலாளர் ரத்தினம், சேது கருணாநிதி, ஜீவரத்தினம், சக்தி, அண்ணாமலை, குணசேகரன், கிருஷ்ணமூர்த்தி, குமரகுரு, மணிமண்ணன், எஸ் எம் டி . அருளானந்த் மற்றும் வழக்கறிஞர் பூமிநாதன், கணேசன், திலகர் மற்றும் மனோகரன் மற்றும் கழக நிர்வாகிகள் முருகன் மற்றும் பாலா, கபிலர், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஆதிதாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச்செயலாளர்- அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் 26.05.2025 திங்கட் கிழமை அன்று காலை 09.00 மணியளவில் வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி முன்னாள் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் பணி சம்மந்தமாக ஆலோசனை வழங்கப்பட உள்ளது. எனவே இக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பார்வயாளர்கள், கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:-** முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா. 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் சம்பந்தமாக. கழக ஆக்கப் பணிகள்

அமைச்சர் **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்.**

கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்

செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



நெல்லை மாவட்டம் “உங்களை தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின் கீழ் இராதாபுரம் வட்டம் வள்ளியூரில் கட்டப்பட்டு வரும் மாவட்ட தலைமை மருத்துவமனையின் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு நேரில் பார்வை விட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மரு.இரா.சுகுமார், மருத்துவர் லதா, நம்பி, ஜோசப் பெல்சி, ஆவரைகுளம் பாஸ்கர், மாடசாமி, வில்லியம் ஜேசுதாஸ் உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.




சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மண்டல பொறுப்பாளரும் நிதி அமைச்சருமான தங்கம் தென்னரசு சிறப்புரையாற்றினார். மேடையில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ,முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட நிர்வாகிகள் அ.கணேசன், த.சேங்கைமாறன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் எஸ்.சுந்தர்ராஜ், கே.முருகவேல், கே.சண்முகம், கேஆர்.என்.போஸ், மற்றும் மாநில பொறுப்பாளர்கள் உள்ளார்கள்.



தூத்துக்குடி மாநகரம் 49வது வார்டுக்கு உட்பட்ட ராஜபாண்டி நகர் மற்றும் கலைஞர் நகர் ஆகிய பகுதிகளில் கடந்த 2023ஆம் ஆண்டு மழை வெள்ளத்தால் வீடுகளை இழந்தோருக்கு, ஜெ.எஸ். டபுள்யு நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதி மூலம் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் வழங்கினார். உடன் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், வட்டச் செயலாளர் மூக்கையா, மாமன்ற உறுப்பினர் வைதேகி மற்றும் நிறுவன அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் நகர கழக சார்பில் கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் தேரடியில் சின்னமனூர் நகர செயலாளர் முத்துக்குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட அவை தலைவர் மனோகரன் வரவேற்புரையாற்றினார். சின்னமனூர் நகர மன்ற தலைவர் அய்யம்மாள், மாநில பொதுக்குழு உறுப்பினர் தக்காளி அக்கீம், முத்துக்குமரன் ஆகியோர் முன்னிலை வைத்தனர். தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமைக் கழக பேச்சாளர் வெள்ளைச்சாமி, மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் பாண்டியன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். 11 வது வார்டு செயலாளர் சதுக்கத்தலா நன்றி உரையாற்றினார். மற்றும் நகர கழக நிர்வாகிகள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை மேலப்பாளையம் மண்டல அலுவலகம் முன்பு முன்னாள் அமைச்சர்,கழக மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன்கான் ஏற்பாட்டில் மேலப்பாளையம் பகுதிகளில் தற்போது கோடைகாலத்தில் பெருகிவரும் உஷ்ண நோய்கள்,பித்த நோய், மஞ்சள் காமாலை,பித்த ஆதிக்கம் போன்றவற்றிலிருந்து மக்களை பாதுகாத்திடும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேலப்பாளையம் மண்டல அலுவலக முன்பு “சீந்தில் குடிநீர்” பிரச்சார ஜீப் மூலம் பொதுமக்களுக்கு தொடர்ந்து 2வது நாளாக முன்னாள் அமைச்சர் மைதீன்கான் வழங்கினார்.நிகழ்வில் லி.முகமது மீரான்மைதீன், நவநீதன், ஆமினா சாதிக், இசக்கி, முறுக்கு சாகுல்,சாலி மௌலானா, சுந்தர், நித்யபாலையா, ஹாப்ஸா முகைதீன், அப்துல் காதர், நெல்லை ரவி, மாவட்ட பிரதிநிதி சுரேஷ், செ.க.மு.அலி, பேரங்காடி ஐயப்பன், ஜமிலா காஜா, பெரோஸ்கான், தொ.மு.ச சுந்தரம், சிவணுபாண்டியன், ஆதம்பாவா, குறிச்சி ஆறுமுகம், பிச்சையா ஆகியோர் கலந்து கொண்டனர்.



உசிலம்பட்டி சட்டமன்றதொகுதி செட்டியபட்டி எட்டுஊர் இளைஞர் குழு சார்பாக தங்கள் கிராமத்தில் குன்னத்துப்பட்டி முதல் கோம்பை வரையிலான 2.5கிமீ தார்ச் சாலையின் இரு புறங்களிலும் உள்ள முட்புதர்கள் மற்றும் குப்பைகளால் மக்கள் சென்று வர சிரமமாக உள்ளதாக கூறி அதனை சுத்தம் செய்து தர கோரிக்கை வைத்தனர் அதன் அடிப்படையில் அப்பணியினை இளமகிழன் தனது சொந்த நிதியில் துவக்கி வைத்தார். உடன் எம்.பி. பழனி மற்றும் கழக நிர்வாகிகள் மற்றம் எட்டுஊர் இளைஞரணியினர் உள்ளனர்.